பங்களிப்பாக ரூ.35 லட்சம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக கணக்கில் செலுத்த மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்: 17986/2023/எச்1

**தீர்மானம் எண்.805**

பதிவு செய்யப்பட்டது.

37. இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றிவரும் கீழ்காணும் பணியாளர்களுக்கு 2022–23–ம் ஆண்டிற்கான சீருடை துணி வழங்கப்பட வேண்டும்.

1. தூய்மை பணியாளர்கள் – ஆண் – 103
2. தூய்மை பணியாளர்கள் – பெண் – 65
3. மகப்பேறு ஆயா – 2
4. தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் – ஆண் – 6
5. தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் – பெண் – 2

மேற்கண்டுள்ள பணியாளர்களுக்கு அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து சீருடை துணி வாங்கவும், அதற்குண்டான தையற்கூலி வழங்கவும் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு காலணிகள் வாங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1. அனுமதிக்கலாம்.

2. பணியாளர்களின் நலன் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று சீருடை துணிகள் வாங்க வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: 5443/2020/எச்1

**தீர்மானம் எண்.806**

அனுமதிக்கப்பட்டது.

38. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட புனித சவேரியார் பேராலய திருவிழா வருகிற 24.11.2023 முதல் 03.12.2023 வரை நடைபெற இருப்பதால் சுகாதார பணிகள் மேற்கொள்ள இருப்பில் இல்லாத வெள்ளை பினாயில் மற்றும் கைமார் ஆகியவை தேவைபடுவதாக சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியில் இருப்பில் இல்லாத வெள்ளை பினாயில் 400 லிட்டர் மற்றும் கைமார் 50 எண்ணம் பெற உள்ளூர்

விற்பனையாளர்களிடமிருந்து 3 விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் பெயர்** | **வெள்ளை பினாயில் 1 லிட்டர் ரூ** | **கைமார் ஒன்று ரூ** |
|---|---|---|---|
| 1 | ஜெகதம் டைஸ் & கெமிக்கல்ஸ், கோட்டார், நாகர்கோவில் | ரூ. 48/- | |
| 2 | சுகன்யா டைஸ் & கெமிக்கல்ஸ், கேப்ரோடு, கோட்டார், நாகர்கோவில் | ரூ. 62/- | |
| 3 | IR கெமிக்கல்ஸ், கோவிதம், குஞ்சன்விளை, எறும்புகாடு அஞ்சல், நாகர்கோவில் | ரூ. 68/- | |
| 4 | AM இஸ்மாயில் அயன் மெர்சென்ட், 154, கேப்ரோடு, கோட்டார் | | ரூ. 30/- |
| 5 | AS டிரேடர்ஸ், 5/146E, திருப்பதிசாரம் அஞ்சல், வெள்ளமடம் | | ரூ. 35/- |
| 6 | P.ஆறுமுகம், கயர் ஸ்டோர்ஸ், எம்.எஸ் ரோடு, வடசேரி. | | ரூ. 50/- |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வெள்ளை பினாயில் 1 லிட்டருக்கு ரூ.48/- குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஜெகதம் டைஸ் & கெமிக்கல்ஸ், கோட்டார், நாகர்கோவில் நிறுவனத்திற்கும், கைமார் ஒன்றுக்கு ரூ.30/- குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள AM இஸ்மாயில் அயன் மெர்சென்ட், 154, கேப்ரோடு, கோட்டார், நாகர்கோவில் நிறுவனத்திற்கும் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி கொள்முதல் செய்து பணி செய்யவும், 400 லிட்டர் வெள்ளை பினாயில் ரூ.19200/-க்கும், கைமார் ரூ.1500/-க்கும் மொத்தம் ரூ.20,700/-க்கும் தொகை வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை

உத்தரவு வழங்கி கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளவும், அதற்கான தொகை வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: 10214/2020/எச்1

**தீர்மானம் எண்.807**

அனுமதிக்கப்படுகிறது.

39. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.50–இல் குஞ்சன்விளை, பரப்புவிளை, பொட்டல் விளை ஊருக்கு தண்ணீர் வழங்க 5HP மோட்டார் அமைத்து அதிலிருந்து பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,10,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்தி பத்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ2/17343 /2023

**தீர்மானம் எண்.808**

அனுமதிக்கப்படுகிறது.

40. இம் மாநகராட்சிக்குசொந்தமான அம்மா உணவகம் ஆசாரிபள்ளத்தில் சட்டமன்ற உறுதி மொழி குழு ஆய்வு செய்யப்பட்டதில் மின் விளக்குகள், மின்விசிறி, கழிவறை மற்றும் False Ceiling போன்ற பணிகள் மேற்க்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் ஆசாரிபள்ளம் மற்றும் வடசேரி பகுதிகளில் அமைந்துள்ள அம்மா உணவகங்களில் மின் வசதி பணிகள் மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.60,000/–க்கு (ரூபாய் அறுபதாயிரம்)– க்கு நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ4/18318 /2023

**தீர்மானம் எண்.809**

அனுமதிக்கப்படுகிறது.

41. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் பவுன் தெருவில் Telephone BSNL அஞ்சல்துறை குடியிருப்புகளில் பழுதடைந்த பம்புரூம்மினை இடித்து அகற்றி புதியதாக சின்டெக்ஸ் டேங் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ1,90,000/–(ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம்)–க்கு நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ2/18065/2023

**தீர்மானம் எண்.810**

அனுமதிக்கப்படுகிறது.

42. இம் மாநகராட்சிக்குட்பட்ட முக்கடல் அணை மற்றும் மார்த்தால் மின் உந்து நிலையம் ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்ற 120HP, 60HP, 75HP மோட்டார்கள் Pannel Board. Sluice Valve கள் மற்றும் இதர மின்சார உபகரணங்கள் மற்றும் முக்கடல் அணையிலிருந்து கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரை எடுத்து வரும் Gravity main 800mm,P.S.C pipe,600mm P.S.C pipe 400mm M.S. pipe– களில் ஏற்படும் பழுதுளை சரி செய்யும் பணிக்கு 1 வருட காலத்திற்கு (2023–24) பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24,83,000/–(ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்தி எண்பத்தி மூவாயிரம்)–க்கு குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்க்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ2/14855/2023

**தீர்மானம் எண்.811**

அனுமதிக்கப்படுகிறது.

43. இம் மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோயில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இயக்கப்பட்டு வருகின்ற 75HP, 50HP, 30HP, 12.5HP மோட்டார்கள் Pannel Board, மின்மாற்றி Sluice Valve –கள் மற்றும் இதர மின்சார உபகரணங்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு (2023–24) ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை 24,50,000/– (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்தி ஐம்பதாயிரம்)–க்கு மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ2/14854/2023

**தீர்மானம் எண்.812**

அனுமதிக்கப்படுகிறது.

44. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.52–இல் காடேற்றி ஊரில் உள்ள கிணற்றில் 5HP மின்மோட்டார் பொருத்தி சர்வீஸ் லைன் இணைத்து குடிநீர் வழங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.90,000/–க்கு (ரூபாய் தொண்ணூராயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ2/18208/2023

**தீர்மானம் எண்.813**

அனுமதிக்கப்படுகிறது.

45. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 வெள்ளாளர் மேலத்தெருவில் Sintex Tank bed சேதம் அடைந்த நிலையில் இருப்பதால் புதியதாக Pedestrain sintex tank bed மற்றும் அருகில் Storm water drain cross culvert சேதம் அடைந்த பகுதியை இடித்து புதியதாக கட்டுவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை 1,60,000/–(ரூபாய் ஒரு இலட்சத்தி அறுபதாயிரம்)–க்கு மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ2/18207/2023

**தீர்மானம் எண்.814**

அனுமதிக்கப்படுகிறது.

46. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 CBH School cross street பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டில் இருக்கும் Borewell sintex bed உடைந்த நிலையில் உள்ளது. இதனை சரி செய்வதற்கு ஒரு Pedestrain Sintex Tank கட்டுவதற்கும் அருகில் ஒரு drain cross culvert சேதமடைந்துள்ளதை இடித்து புதியதாக Culvert கட்டுவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,60,000/–(ரூபாய் ஒரு இலட்சத்தி அறுபதாயிரம் )–க்கு மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ2/18317/2023

**தீர்மானம் எண்.815**

அனுமதிக்கப்படுகிறது.

47. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.42–ல் மதுசூதனபெருமாள் காலனியில் 3" பகிர்மான குடிநீர் குழாய் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை 1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து)–க்கு நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ2/16372/2023

**தீர்மானம் எண்.816**

அனுமதிக்கப்படுகிறது.

48. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5–இல் பஞ்சபாண்டவர் கோவில் தெரு, காமராஜர் காலனி பாலம், பரமார்த்தலிங்கபுரம் பகுதியில் சிறுபாலம் முற்றிலும் சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி பணியின் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு மழைநீர் சாலை குறுக்கே செல்லும் சிறுபாலம் பணிகள் மேற்கொள்ளுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,60,000/–க்கு (ரூபாய் நான்கு லட்சத்தி

அறுபதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/17323/2023

**தீர்மானம் எண்.817**

அனுமதிக்கப்படுகிறது.

49. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22–இல் டிரவல் தெருவில் சிமெண்ட் தளம் மற்றும் Soak pit அமைத்து தர கேட்டுக்கொண்டதன் படி மேற்படி சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதாலும் மேற்படி சாலை குறுகலாக உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் வெளியேற இயலாமல் அப்பகுதியில் தேங்கி சுகாதார சீர்கேடு விளைகிறது. எனவே அப்பகுதியில் ஒரு Soak pit அமைத்து சிமெண்ட் தளம் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,90,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி தொண்ணூறாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/ 15620/2023

**தீர்மானம் எண்.818**

அனுமதிக்கப்படுகிறது.

50. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–இல் மாடன் கோவில் தெருவில் வாறுகால் மூடிகள் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகுவதுடன் அப்பகுதியில் மிகுந்த விபத்துகள் ஏற்பட காரணமாக உள்ளது. மேற்படி சாலை பிரதான சாலைகளில் போக்குவரத்து ஏற்படும் சமயங்களில் இச்சாலை இருசக்கர வாகன ஓட்டிகள் செல்வதற்கு பயனுள்ளதாக அமைகிறது. எனவே பழுதடைந்த மூடிகளை அகற்றி வாறுகால்களில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றி புதிய வாறுகால் மூடி அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.72,000/–க்கு (ரூபாய் எழுபத்தி இரண்டாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/ 7433/2023

**தீர்மானம் எண்.819**

அனுமதிக்கப்படுகிறது.

51. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6–இல் பள்ளிவிளை குறுக்குத்தெருவில் பள்ளிவிளை மெயின் பகுதியில் இருந்து செல்லும் மழைநீரானது முழுமையாக செல்லாமல் சாலைப்பகுதியில் அதிக அளவில் தேங்கி நிற்பதால் சாலை பகுதியை பொதுமக்கள் கடப்பதற்கு சிரமாக உள்ளது. எனவே மேற்படி இடத்தில் சாலை குறுக்கே செல்லும் சிறுபாலம் சேதமடைந்துள்ளதால் புதியதாக சிறுபாலம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,15,000/–க்கு (ரூபாய் மூன்று லட்சத்தி பதினைந்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/18224/2023

**தீர்மானம் எண்.820**

அனுமதிக்கப்படுகிறது.

52. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8–இல் அருகுவிளை மேற்கு தெருவில் உள்ள மழைநீர் வடிகால் சில பகுதியில் சேதமடைந்தும் மழைநீர் வடிகால் சுவர் (drain wall) தார் சாலை தளத்தின் மேல் பகுதியில் இருந்து ஒரு அடி சற்று பள்ளப்பகுதியில் உள்ளது. எனவே மழைநீர் வடிகால் சுவரை 350m நீளத்திற்கு உயர்த்தி கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,30,000/–க்கு (ரூபாய் நான்கு லட்சத்தி முப்பதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/15551/2023

**தீர்மானம் எண்.821**

அனுமதிக்கப்படுகிறது.

53. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48–ல் கன்னங்குளம், லாலாவிளை, வெள்ளடிச்சிவிளை நைனார்புதூர் பகுதியில் உள்ள சேதமடைந்த மழைநீர் வடிகால் ஓடையின் பக்கச்சுவரை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,16,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/17224/2023

**தீர்மானம் எண்.822**

அனுமதிக்கப்படுகிறது.

54. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.51–இல் கோவில் விளை குறுக்குத்தெருவில் மழைநீர் தேங்கியுள்ள இடத்தில் (கான்கிரீட்) தளம் அமைத்தல் பணிக்கு பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,16,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சத்தி பதினாறாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/17868/2023

**தீர்மானம் எண்.823**

அனுமதிக்கப்படுகிறது.

55. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27–ல் அண்ணா நகர் பகுதியில் உள்ள இரண்டு நியாயவிலைக்கடைகளில் தரைதளம் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்திடவும் நியாய விலை கடையின் முன்பகுதியில் தகரக்கூரை அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,80,000/–க்கு (ரூபாய் மூன்று லட்சத்தி எண்பதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/17328/2023

**தீர்மானம் எண்.824**

அனுமதிக்கப்படுகிறது.

56. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் டென்னிசன் சாலை லாவண்யா சானிட்டரி சென்டர் பக்கம் உள்ள வடிகாலில் மழைகாலங்களில் அதிக அளவில் மழைநீர் வருவதால் மழைநீர் வழிந்தோட வழியில்லாமல் சாலையின் மேற்புறம் வழியாக செல்வதால் சாலை சேதமடைந்துள்ள அப்பகுதியின் வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதுடன் அப்பகுதியில் சுகாதார சீர் கேடு விளைகிறது. எனவே மேற்படி இடத்தில் உள்ள அடைப்புகளை அகற்றிடவும் புதிதாக சிறுபாலம் அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,50,000/–க்கு (ரூபாய் ஏழு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/18263/2023

**தீர்மானம் எண்.825**

அனுமதிக்கப்படுகிறது.

57. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13−இல் அசம்பு ரோடு கிழக்கு பக்கமுள்ள மழைநீர் வடிகால் ஓடை பழுதடைந்துள்ளதால் மேற்படி சாலையின் மட்டம் வரைக்கும் மழைநீர் வடிகால் உயர்த்தி Covering slab அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,20,000/−க்கு (ரூபாய் நான்கு லட்சத்தி இருபதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழுங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :− அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/13741/2023

**தீர்மானம் எண்.826**

அனுமதிக்கப்படுகிறது.

58. இம் மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் சேகரமாகும் மக்கும் குப்பைகளை தரம் பிரித்து மாநகராட்சிக்கு சொந்தமான நுண்ணுயிர் செயலாக்கம் மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இயந்திரம் மூலம் அரைக்கப்பட்டு வருகிறது. அவ்வியந்திரத்தில் (2023−2024)−க்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.26,30,000/− (ரூபாய் இருபத்தி ஆறு இலட்சத்து முப்பதாயிரம்)−க்கு நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :− அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ3/18316/2023

**தீர்மானம் எண்.827**

அனுமதிக்கப்படுகிறது.

59. இம் மாநகராட்சியில் வடசேரி மீன்சந்தை அருகே 300mm AC pipe உடைவு புத்தேரி அருகே 800mm AC pipe− ல் உடைவு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளே 350mm AC pipe− ல் உடைவு கிருஷ்ணன்கோவில் மெயின்ரோடு துர்க்கா மிட்டாய் கடை அருகில் 300mm AC pipe − ல் உடைவு அருகுவிளை ரேசன் கடை அருகே 600mm PSC line pipe − ல் குடிநீர் குழாய்கள் உடைந்ததை சரி செய்தல் பணிக்கு குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்க்கொள்ள மன்ற தீர்மானம் எண்.690 நாள்.29.09.2023−ன் படி ரூ.4,76,000/−க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி 30.10.2023 அன்று E−Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் பின்வருமாறு.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

| | | |
|---|---|---|
| 1. | M/s. JLG Engineering Private Ltd, காட்டாத்துறை | மதிப்பீட்டை விட 0.08% குறைவு (ரூ.398835.77) |

மேற்படி பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. JLG Engineering Private Ltd நிறுவனம் மதிப்பீட்டை விட 0.08% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.இ2/311/2023-24

**தீர்மானம் எண்.828**

அனுமதிக்கப்படுகிறது.

60. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34 தட்டான் விளை அம்மன் கோவில் தெருவில் போர்வெல் அருகே சின்டெக்ஸ் டேங்க் அமைத்து அதன் அருகில் உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்தல் பணிக்கு குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்க்கொள்ள மன்ற தீர்மானம் எண்.709 நாள்.29.09.2023-ன் படி ரூ.1,70,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி 30.10.2023 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் பின்வருமாறு.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

| | | |
|---|---|---|
| 1. | M/s. V.N Construction சரக்கல்விளை | மதிப்பீட்டை விட 3.80% குறைவு (ரூ.164538.00) |

மேற்படி பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. V.N Construction நிறுவனம் மதிப்பீட்டை விட 3.80% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்.இ2/314/2023-24

**தீர்மானம் எண்.829**

அனுமதிக்கப்படுகிறது.

61. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29 அம்மன் குளம் தெரு மற்றும் செட்டி தெருவில் பழுதடைந்துள்ள பழைய PVC குழாயை மாற்றி புதியதாக GI pipe மூலம் குடிநீர் குழாய் அமைத்தல் பணிக்கு குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்க்கொள்ள மன்ற தீர்மானம் எண்.692 நாள்.29.09.2023-ன் படி ரூ.4,90,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி 30.10.2023 அன்று E-Tendering முறையில்

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் பின்வருமாறு.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

| | | |
|---|---|---|
| 1. | திரு.T. துரை<br>நாகர்கோவில் | மதிப்பீட்டை விட 0.48%<br>குறைவு (ரூ.405761.90) |

மேற்படி பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T. துரை என்பவர் மதிப்பீட்டை விட 0.48% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்.இ2/309/2023–24

**தீர்மானம் எண்.830**

அனுமதிக்கப்படுகிறது.

62. இம் மாநகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையில் இருந்து கிருஷ்ணன்கோவில் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் பிரதான குழாய் (Gravity pipe 800mm) திட்டுவிளை, அரசன் குழி, துவரங்காடு இறச்சகுளம், துவாரகா நகர், A.K நகர் மற்றும் அறுகுவிளை பகுதியில் பழுதடைந்த நிலையிலும் மற்றும் அறுகுவிளை Railway track சமீபம் (400mm) ஆகிய 13 இடங்களில் உள்ள பழுதினை சரி செய்தல் பணிக்கு குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்க்கொள்ள மன்ற தீர்மானம் எண்.689 நாள்.29.09.2023–ன் படி ரூ.13,40,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி 30.10.2023 அன்று E–Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் பின்வருமாறு.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

| | | |
|---|---|---|
| 1. | M/s. JLG Engineering Private Ltd<br>காட்டாத்துறை | மதிப்பீட்டை விட 0.05%<br>குறைவு (ரூ.1123606.00) |

மேற்படி பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. JLG Engineering Private Ltd நிறுவனம் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்.இ2/317/2023–24

**தீர்மானம் எண்.831**

அனுமதிக்கப்படுகிறது.

63. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 வரிவிதிப்பு எண்.150/022/900219, கதவு எண்.111, வரி விதிப்பாளர் பெயர் கனக சீதப்பால், மதன் மோகன் டெக்சர் அமர்நாத் ஜெய்கிஷன் பெயர் கொண்ட கட்டிடம் வணிக பயன்பாட்டில் இருந்தது. தற்போது 31.10.2019 முதல் குடியிருப்பு பயன்பாடாக மாற்றப்பட்டுள்ளதால் சொத்துவரியினை குடியிருப்பு பயன்பாட்டு சொத்துவரியாக மாற்றி அமைத்திட கோரப்பட்டதை தொடர்ந்து, மேற்படி கட்டிடம் 1760 சதுர அடி கொண்டதற்கு 01.04.2022 முதல் அரையாண்டு சொத்துவரி ரூ.5,336/– என கணக்கிடப்பட்டுள்ளது. ஏற்கனவே வணிக பயன்பாட்டு நிரக்கில் அரையாண்டு சொத்துவரி ரூ.20,490/– என இருந்ததை ரத்து செய்து விட்டு குடியிருப்பு பயன்பாட்டு கட்டிடத்திற்க்கு அரையாண்டு சொத்துவரி ரூ.5,336/–என நிர்ணயம் செய்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்

கோப்புஎண்.11223/2023/அ4

**தீர்மானம் எண்.832**

அனுமதிக்கப்படுகிறது.

64.நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7234/2014/ஆர்1 நாள்.15.03.2018–ன் படி அரசு பள்ளிகள் மற்றும்அரசு மானியம் பெற்று இயங்கும் பள்ளிகள் தவிர்த்து மீதமுள்ள பள்ளி / கல்லூரி கட்டிடங்களுக்கு 2017–2018–II முதல் சொத்துவரி விதித்திட அறிவுரைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து சுயநிதி பள்ளி / கல்லூரிகளுக்கும் 2017–18–II அரையாண்டு முதல் சொத்துவரி விதிக்கப்பட்டது. அவ்வகையில் மாநகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.34–ல் செயல்பட்டு வரும் RCLPC தொடக்கப்பள்ளிக்கு அரையாண்டு சொத்துவரி ரூ.13,972/– என 2017–2018–II முதல் வரி விதிக்கப்பட்டது (சொத்துவரி விதிப்பு எண்.150/034/902064)

இந்நிலையில் மேற்படி பள்ளியின் தாளாளர் அவர்கள் தனது 16.12.2022 கடிதத்தில் மேற்படி பள்ளி அரசு மானியம் பெற்று செயல்பட்டு வரும் பள்ளி என குறிப்பிட்டு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களித்திட கோரப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.17328/2022/அ2 நாள்.02.03.2023–ன் வழி மாவட்ட கல்வி அலுவலரிடம் மேற்படி பள்ளி அரசு / அரசு மானியம் பெற்று செயல்பட்டு

வரும் பள்ளியா என்பது குறித்ததெளிவுரை கோரப்பெற்ற நிலையில் மாவட்ட கல்வி அலுவலர் (பொ) மாவட்ட கல்வி அலுவலகம் (தொடக்கக்கல்வி) கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில் அவர்கள் கடிதம் ந.கஎண்.871/ஆ4/2023 நாள்.31.03.2023–ல் மேற்படி பள்ளி அரசு மானியம் பெற்று செயல்பட்டு வரும் பள்ளி என்ற விபரத்தினை தெரிவித்துள்ளதால் மேற்படி பள்ளி கட்டிடத்திற்கு 2017–2018–II முதல் 2023–2024–II வரையிலான சொத்துவரி ரூ.2,23,552/–ஐ சொத்துவரி கேட்பிலிருந்து வஜா செய்திடவும் மற்றும் மேற்படி சொத்துவரி விதிப்பினை (சொத்துவரிவிதிப்பு எண்.150/034/902064) கேட்பிலிருந்து நிரந்தரமாக நீக்கம் செய்திடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்

கோப்புஎண்.17328/2022/அ2

**தீர்மானம் எண்.833**

அனுமதிக்கப்படுகிறது.

65. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜர் 5 மாடி கட்டிடத்தில் அடித்தளத்தில் உள்ள கடை எண் 1–ஐ உரிமம் எடுத்து நடத்தி வந்த திரு. சுகுமாரன் என்பவர் மேற்படி கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் 30.06.2023–இல் திரும்ப மாநகராட்சி வசம் ஒப்படைத்து தான் மேற்படி கடைக்காக செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட கோரியுள்ளார்.

மேற்படி கடைக்கு மாமன்ற தீர்மான எண் –266, நாள்.30.05.2023–ன்படி மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு 07.06.2023 அன்று நடைபெற்ற மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திருமதி. சுஜாதா கண்ணன் என்பவர் மாத வாடகையாக ரூ 85,300/–என கோரப்பட்டதின் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 338, நாள் – 30.06.2023–இல் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் மேற்படி கடையினை 01.07.2023 முதல் திருமதி. சுஜாதா கண்ணன் என்பவருக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடைக்கு திரு. சுகுமாரன் என்பவர், வைப்புத் தொகையாக ரூ 10.00 இலட்சம் மற்றும் 12 மாத வைப்புத் தொகையாக ரூ 12,13,404/– ஆக மொத்தம் ரூ 22,13,404/– இருப்பில் உள்ளது. மேற்படி தொகையில் திரு. சுகுமாரன் என்பவர் மேற்படி கடைக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ 4,11,648/–ஐ வைப்புத்

தொகையில் இருந்து ஈடு செய்துவிட்டு மீதமுள்ள தொகை ரூ 18,01,756/- காலங்கடந்த வைப்புத் தொகையினை மாமன்ற ஆனுமதி பெற்று திரு. சுகுமாரன் என்பவருக்கு திரும்ப வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு - அனுமதிக்கலாம்.

கோப்பு எண் - 02029/2023/அ6

**தீர்மானம் எண்.834**

அனுமதிக்கப்படுகிறது.

**66.** நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் புனித சவேரியார் கோவில் திருவிழாவை முன்னிட்டு 24.11.2023 முதல் 03.12.2023 வரை 10 தினங்கள் அரசு ஆயுர்வேத மருத்துவமனை முன்புறத்திலிருந்து ஈத்தாமொழி ரோடு சந்திப்பு வரையிலும், செட்டிக்குளம் சந்திப்பு கிழக்கு பக்கத்திலிருந்து சவேரியார் கோவில் சந்திப்பு வரையிலும் (பயோனியர் முத்து மஹால் முன்வாயில் பகுதி மற்றும் கோவிலின் நுழைவு வாயில் பகுதி நீங்கலாக) சாலை ஓரங்களில் தற்காலிகமாக வைக்கப்படும் 5' X 5' அளவு ஸ்டால்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ 100/- வீதம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 17.11.2023 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் கீழ்கண்டவாறு.

| **வ.எண்** | **பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ** | **பொது ஏலத் தொகை ரூ** |
|---|---|---|---|
| 01 | திரு. M. ராஜன்<br>த/பெ. மணி<br>21, சவேரியார் கோவில் தெரு<br>நாகர்கோவில் | **27,00,055/-** | 20,00,000/ - |
| 02 | திரு. ராஜசேகர்<br>த/பெ. சந்திரசேகரன்<br>6/58, ஊட்டுவாள்மடம்<br>கோட்டார், நாகர்கோவில் | 25,55,055/- | 19,02,000/- |
| 03 | திர. ஷாஜின்<br>த/பெ காந்தி<br>8-94, கடைத் தெரு<br>அக்கரை, சுசீந்திரம்,<br>கன்னியாகுமரி மாவட்டம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | 19,05,000/- |

| | | | |
|---|---|---|---|
| 04 | திரு. A. லாறன்ஸ்<br>த/பெ அந்தோணி<br>56, சந்தனமாரியம்மம் கோவில் தெரு<br>கோட்டார், நாகர்கோவில் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | 19,10,000/- |
| 05 | திரு. C. ஆல்பர்ட் ஜாப்ரின்<br>த/பெ செல்லையா<br>29A-70,<br>செம்மாங்குடியிருப்பு ரோடு<br>நாகர்கோவில் | 22,11,000/- | பொது ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை |

மேற்காணும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் உயர்ந்தபட்ச தொகையாக ரூ 27,00,055/- என ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரிய திரு. M. ராஜன் என்பவருக்கு உரிமம் வழங்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நேக்கி வணக்கத்திற்குறிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண் – 18664/2015/அ8**

**தீர்மானம் எண்.835**

அனுமதிக்கப்படுகிறது.

**67.** நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டட விதிகள் 2019, பிரிவு 30(1)-இன்படி தொடர்கட்டுமானப் பகுதிகள் கண்டறியப்பட்டு அதன் பட்டியல் மாமன்ற தீர்மானம் எண்:168, நாள்:08.03.2019-இன்படி அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் நாகர்கோவில் முழுமைத் திட்டத்திற்கான வரைவு திட்ட அறிக்கை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் தயார் செய்யப்பட்டு 27.10.2023-இல் நகர் ஊரமைப்பு இயந்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி நாகர்கோவில் முழுமைத்திட்டத்தில் மாநகர் பகுதியில் உள்ள தொடர் கட்டுமான பகுதிகளை இணைக்க இறுதி செய்ததில் மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள சர்வே வார்டு மற்றும் பிளாக்கில் கண்டுள்ள நகரளவை எண்ணிற்கும் தொடர் கட்டுமானப் பகுதியாக அறிவிப்பு செய்ய பெறப்பட்டுள்ள நகரளவை எண்ணிற்கும் கூட்டு

எண்ணிக்கையில் மாறுபாடு உள்ளது. எனவே தொடர் கட்டுமான பகுதியாக அறிவிப்பு செய்ய இறுதி செய்யப்பட்டுள்ள நகரளவை எண்களுக்கான 'Corelation Statement'–ஐ மாமன்ற ஒப்புதலுடன் வழங்கிட உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கடிதம் எண்:679/2019ககுமாநஊஅ நாள்:15.11.2023–இல் தெரிவிக்கப்பட்டுளளது.

மாவட்ட நகர் ஊரமைப்பு துறையால் இறுதி செய்து அனுப்பப்பட்ட தொடர் கட்டுமானப் பகுதிகளுக்கான சர்வே எண்கள் நடைமுறையில் இருந்த நகரளவை எண்கள் ஆகும். ஆனால் நாகர்கோவில் முழுமைதிட்டத்திற்கான வரைவு திட்ட அறிக்கையில் உள்ள நகரளவை எண்கள் மறு நகரளவை எண்களாகும். எனவே தொடர் கட்டுமான பகுதிகளுக்கான சர்வே எண்களை நாகர்கோவில் முழுமைத்திட்டத்திற்கான வரைவு திட்ட அறிக்கையில் சேர்க்கும் போது ஏற்படும் வேறுபாட்டை சரி செய்ய தொடர் கட்டுமானப் பகுதியாக அறிவிக்க இறுதி செய்த நகரளவை எண்களுக்கான ஒத்திசைவு பட்டியல் (Corelation Statement) கீழ்கண்டவாறு நகரளவர் மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது.

| ANNEXURE | | | |
|---|---|---|---|
| **Recommended for Continuous Built up Areas in Nagercoil Local Planning Area** | | | |
| **Sl.NO** | **WARD** | **BLOCK** | **NEW WARD T.S.NO.** |
| 1 | B | 5 | 1 to 18, 20 to 33, 35 to 70, 72 to 92, 94 to 110, 112 to 131, 133 to 169, 171 to 185, 187 to 200, 202 to 229, 232 to 262. |
| 2 | B | 18 | 16 to 20, 23, 26 to 33, 35 to 37, 39 to 43, 45 to 54, 56, 57, 59 to 71, 90, 91 |
| 3 | B | 19 | 2 to 36, 39 to 176,178 to 223 |
| 4 | B | 21 | 3 to 19, 23 to 48, 50 to 55, 57 to 69, 71 to 79, 81 to 92, 94 to 102, 104 to 108, 110 to 123, 125 to 155, 158 to 167, 171 to 176, 178 to 184, 186 to 191, 193 to 209, 211 to 215, 217 to 223, 225 to 232, 234 to 243, 246 to 251. |
| 5 | B | 22 | 1 to 19, 21 to 38, 40 to 61, 63 to76, 78 to 94, 97 to 111, 114,115,116. |
| 6 | B | 23 | 1 to 17, 19 to 22, 24 to 33, 35 to 44, 46 to 58, 61 to 80, 82 to 108, 110 to 135, 137, 138, 140 to 145, 147 to 170, 172 to 175, 177 to 200, 202 to 224, 226 to 244, 246 to 264, 269 to 281, |

| | | | |
|---|---|---|---|
| 7 | B | 24 | 1 to 4, 6 to 32, 34, 44, 60, 63 to 67, 70 to 97, 99, 100, 102 to 117, 124 to 132, 134 to 139, 142 to 149, 152 .153, 155 to 172, 175, 176, 178 to 199, 201 to 213, 215 to 229, 231, 232, 241 to 250, 252, 255, 257, 258, 259. |
| 8 | B | 25 | 5 to 18, 21 to 29, 32 to 40, 42, 47 to 60, 63 to 84, 86 to 91, 93 to 101, 103 to 110, 112 to 125, 127 to 131, 133 to 154, 159 to 167, 171 to 186, 188, 190 to 198. |
| 9 | C | 3 | 7 to 21, 23 to 43, 45 to 50, 55 to 66, 69,70,72,74 to 85, 87 to 89, 91 to 114, 116 to 126, 128 to 133. |
| 10 | C | 4 | 4 to 13, 17 to 30, 32 to 39, 42 to 81. |
| 11 | C | 8 | 4 to 9, 11 to 47, 49 to 61, 63 to 77, 80 to 83, 85 to 92, 94 to 103, 105 to 110,112 to 114, 116 to 124, 126 to 129, 131 to 138. |
| 12 | C | 9 | 1,5 to 89, 91 to 117, 119 to 143, 145 to 152, 154 to 172, 175 to 185, 187 to 189, 191 to 221, 223 to 241, 243 to 275. |
| 13 | C | 10 | 2, 8 to 35, 37 to 47, 49 to 58, 60 to 89, 91 to 107, 112 to 137, 139 to 144, 146 to 155, 157 to 164, 166 to 175, 177 to 185, 187 to 199, 201 to 204, 207 to 211, 213 to 221, 235 to 240, 244 to 256, 258 to 272, 285 to 292, 294 to 297, 299, 300, 303 to 309, 311, 312, 314 to 318, 322 to 342, 346 to 349. |
| 14 | C | 11 | 1 to 16, 18 to 24, 26 to 31, 33 to 57, 60 to 62, 65, 72 to 97, 99 to 110, 112 to 124, 126 to 128, 130 to 164, 166, 167, 169 to 172, 175 to 178, 180 to 182. |
| 15 | D | 6 | 1,2, 4 to 16, 21 to 31, 37 to 105, 108 to 112, 114 to 130, 132 to 152, 154 to 161, 164 to 170, 177 to 180, 182 to 197, 202 to 233, 235 to 277, 279 to 304, 306 to 350, 352 to 362, 365 to 377, 380 to 399, 401 to 450, 458 to 461. |
| 16 | D | 12 | 8 to 31, 33 to 39, 42 to 48, 50 to 66, 68 to 70, 91 to 102, 104, 105, 107 to 116, 129 to 132, 134, 135. |
| 17 | D | 13 | 2 to 10, 12 to 58, 64 to 70, 78 to 84, 86 to 95, 97 to 101, 105 to 123,125 to 133, 156 to 193, 195 to 202, 204 to 230, 232, 233, 239 to 259, 263 to 280, 282 to 291, 293 to 297, 304 to 310. |
| 18 | D | 14 | 2, 5, 6, 8 to 32, 34 to 39, 41 to 43, 62, 63, 67 to 69, 71 to 75, 82, 93 to 100, 102 to 108, 110 to 126, 128 to 137, 139 to 151, 156 to 160, 162 to 170, 172 to 175, 178,183 to 195, 197 to 205, 207 to 216, 218 to 231,233 to 261, 263 to 270, 272 to 275, 277 to 297, 303 to 349, 353 to 363, 376 to 379. |

| | | | |
|---|---|---|---|
| 19 | D | 15 | 2 to 23, 25 to 34, 36 to 43, 45, 47 to 52, 54 to 78, 80 to 87. |
| 20 | E | 16 | 2 to 25, 46 to 49, 51 to 53, 55,56. |
| 21 | E | 17 | 7, 12, 13, 50 to 71, 73 to 77, 81 to 83. |
| 22 | E | 20 | 15, 16, 19 to 39. |
| 23 | E | 21 | 108 to 128. |
| 24 | E | 22 | 55 to 58, 62, 63, 67 to 71. |
| 25 | E | 24 | 11 to 30, 32 to 49, 53 to 66, 68 to 70, 73 to 77, 115, 119, 121 to 123, 125 to 132, 134, 207, 208,226 to 243, 245 to 261, 267, 268, 271, 272, 277. |
| 26 | E | 25 | 6 to 20, 22 to 38, 40 to 53, 77, 78. |
| 27 | E | 26 | 47, 55,63, 69, 71 to 73, 76, 77, 81 to 84, 99 to 105, 107 to 125, 133 to 135. |
| 28 | E | 27 | 3 to 64, 66 to 110. |
| 29 | G | 1 | 2 to 8. |
| 30 | H | 12 | 8, 11 to 35, 38 to 55, 62 to 74, 76 to 85, 97 to 112, 121 to 160, 197 to 204, 225 to 229, 237 to 248, 250 to 257. |
| 31 | H | 13 | 29 to 58, 60 to 62, 76 to 86, 88 to 105, 108 to 111. |
| 32 | H | 14 | 30 to 88, 95 to 100, 146 to 189, 198. |
| 33 | M | 1 | 2, 3, 6 to 26, 28 to 46, 48, 49, 196 to 199. |
| 34 | M | 3 | 3 to 39, 79 to 81, 83 to 100, 102, 106 to 117, 119, 120, 142 to 146, 149 to 151, 154 to 166, 168 to 176, 178 to 183, 210 to 212, 215. |
| 35 | N | 2 | 60 to 73, 79 to 81, 84,85, 94,95,97,103 to 105,114, 115, 119 to 137, 139 to 177, 179 to 199, 202 to 213, 215 to 229. |
| | N | 10 | 209, 210. |
| | N | 12 | 120, 125, 127,130, 131, 136 to 145, 150 to 159, 190 to 193. |
| 36 | N | 13 | 80 to 83, 85 to 93, 104 to 115, 119 to 123, 165. |
| 37 | N | 18 | 1 to 8, 14. |
| 38 | N | 19 | 1, 3 to 6, 8, 10 to 18, 20. |
| 39 | N | 20 | 2 to 15, 17, 18, 22, 28 to 40, 51 to 60, 80 to 92, 125 to 130, 143 to 148. |
| 40 | N | 21 | 3 to 6, 20 to 26, 29 to 32, 34 to 40, 42 to 50, 53 to 63, 83 to 86. |
| 41 | P | 4 | 35 to 54, 56 to 69, 71,84 to 89, 92 to 94. |
| 42 | P | 6 | 40 to 44, 47. |
| 43 | P | 7 | 41 to 46, 51 to 61, 63, 64, 66 to 68, 70 to 76. |
| 44 | P | 8 | 123,125,128 to 130. |
| 45 | P | 9 | 147 to 159 |

| | | | |
|---|---|---|---|
| 46 | P | 10 | 67 to 103, 119, 121 to 123, 126 to 130, 132 to 141, 143 to 153, 157, 158, 160 to 162, 164,168 to 172, 174, 176 to 183, 187 to 192, 201 to 218, 250 to 254, 256 to 259, 281. |
| 47 | P | 16 | 2 to 7, 16 to 25, 53 to 57,64 to 76, 85 to 87. |
| 48 | P | 18 | 2 to 11, 36 to 39, 41 to 44, 58 to 71, 74 to 101, 103 to 108, 112, 114 to 124, 126 to 136, 147, 150 to 152. |
| 49 | P | 20 | 2 to 14, 18 to 60, 67, 68, 70 to 73 |
| 50 | P | 22 | 1 to 19, 28 to 31, 36 to 38, 40 to 50, 121. |
| 51 | P | 23 | 2, 3, 5 to 10, 12, 15 to 18. |
| 52 | P | 24 | 2 to 29, 31 to 44, 46 to 90, 92 to 108, 117, 118, 120, 121, 123 to 127 |
| 53 | P | 25 | 59 to 67, 82 to 90, 97 to 101, 103 to 140, 143 to 160, 168 to 186, 189 to 194, 204,206,207. |
| 54 | P | 26 | 2, 3, 5, 6,7,10,11,13 to 22, 24 to 34, 36, 37, 39 to 41, 43, 45 to 50, 52 to 57, 59 to 63, 67 to 74, 76 to 82, 84 to 96, 98 to 108, 110 to 118, 120 to 122, 126 to 139, 141, 143 to 145, 148 to 164, 166, 167, 171, 172, 174 to 179, 181 to 187, 189, 196, 199,202,204 to 211, 213 to 217, 219 to 222, 225 to 230, 232 to 235, 237 to 239, 241 to 249. |
| 55 | P | 30 | 6 to 11, 13 27, 30 to 36, 39 to 56, 58, 59, 61 to 66, 68,70, 71, 73 to 79,81 to 88, 90, 91, 93 to 101, 103 to 108, 110 to 115, 117 to 122, 124,126, 128 to 137, 140 to 144, 146 to 151, 156 to 161, 167, 168, 175 to 180, 186 to 190, 193 to 200, 203, 205 to 210, 212 to 218, 223 to 228,230 to 234, 237 to 240, 244 to 250, 252 to 256, 258, 259, 261 to 263,272 to 279, 282, 284 to 289, 295, 297 to 299, 301. |
| 56 | Q | 1 | 5 to 21, 23, 26 to 59. |
| 57 | Q | 2 | 1 to 53, 55, 57 to 63. |
| 58 | Q | 3 | 2 to 29, 31 to 39, 43 to 64, 71 to 73, 84. |
| 59 | Q | 5 | 4 to 6, 8 to 10, 24,25, 52, 54, 55,57,58,75 to 78, 90, 91, 93, 95, 101, 102, 106. |
| 60 | Q | 6 | 2 to 4, 6 to 8, 10 to 14, 16 to 18, 20 to 28, 31, 37 to 58, 60 to 94, 96 to 110, 112 to 114, 116 to 126, 128 to 131, 133 to 140, 142 to 146,148 to 154, 156 to 167, 169 to 182, 184, 186 to 193, 195 to 203, 207 to 212, 214, 215, 223 to 226, 228 to 237, 239 to 247, 249 to 257,259 to 269, 271 to 279, 284 to 291, 293 to 301, 303 to 307, 309 to 324,326, 327, 331 to 333, 335 to 340, 342 to 347, 349 to 359, 361 to 363,365, 366, 368, 370, 372 to 381, 384 to 386, 388 to 397, 399 to 411,413 to 425, 428 to 434, 436 to 441, 444 to 449, 451, 454 to 460. |

| | | | |
|---|---|---|---|
| 61 | Q | 13 | 1 to 8, 13 to 18, 22, 49 to 51, 65 to 100, 102 to 121, 127 to 146, 148, 152 to 190, 192 to 197, 203 to 205. |
| 62 | Q | 14 | 1 to 29, 31 to 49, 51 to 54, 56 to 72, 74, 75, 77 to 89, 91 to 97, 99 to 113,115 to 121. |
| 63 | R | 1 | 1 to 8, 10 to 19, 21,23 to 27, 30, 31, 33, 35 to 38, 41 to 47, 49 to 60, 62 to 73, 75 to 99, 101 to 104, 106, 107, 118 to 129, 148 to 154, 156 to 163, 165 to 167, 169 to 188, 190 to 196. |
| 64 | R | 2 | 64 to 67, 69. |
| 65 | R | 3 | 2 to 11, 14 to 18, 25 to 28, 31 to 33, 35, 40 to 47, 66 to 68, 78, 89,96,97,99, 100, 108 to 110, 121 to 124, 127 to 144, 157, 158, 160 to 171,173,174,176 to 182, 215 to 218, 287, 288. |
| 66 | R | 4 | 1,3 to 8, 10 to 14, 16 to 22, 24 to 29, 32 to 36, 40 to 55, 57 to 60, 62 to 66, 68 to 76, 79 to 98, 100 to 112, 114 to 121, 124 to 129, 134,135, 137 to 149,151 to 156, 158 to 167, 169 to 175, 177, 179, 183 to 186, 188 to 190, 192 to 201, 212 to 214, 236, 240. |
| 67 | R | 5 | 2 to 7, 9 to 18, 20 to 34, 36 to 38, 40 to 46, 48 to 58, 61 to 66, 68 to 77, 79 to 86,109 to 146, 149, 155 to 163, 175 to 181, 183 to 213, 215 to 217,219 to 222, 224 to 228. |
| 68 | S | 1 | 3, 11 to 20, 22 to 24, 26 to 39, 42 to 47, 49 to 69, 74 to 77, 83 to 86, 88 to 92, 94 to 98, 101, 102. |
| 69 | S | 9 | 15 to 33, 36. |

மேற்படி ஒத்திசைவு செய்யப்பட்ட நகரளவை எண்களின் படி தொடர் கட்டுமான பகுதியாக அறிவிப்பு செய்ய ஏதுவாக மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மூலம் நகர் ஊரமைப்பு துறை சென்னைக்கு அனுப்பிவைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.

கோப்பு எண்:எப்1/953/2019

**தீர்மானம் எண்.836**

அனுமதிக்கப்படுகிறது.

68. கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:2BMMAGON/2023/TCP, நாள்:08.11.2023–இன்படி இம் மாநகராட்சிக்குட்பட்ட நீண்டகரை 'A' கிராமம் புல எண்:301/2–இல் 3900 ச.மீ. (0.963 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை பிரிவிற்கு திருமதி. மேபல் ஹெலீனா ஒப்புதல் வழங்க கேட்டதை தொடர்ந்து மனைப்பிரிவு நிபந்தனைகளுடன்

SWP/மா.வா/நா.உ.தி.கு.எண்:43/2023—இன்படி தொழில் நுட்ப அனுமதியும், 14/2023—இன்படி திட்ட அனுமதியும் (இணையதள ஒப்புதல்) வழங்கப்பட்டுள்ளது. உத்தேச மனைப்பிரிவிற்கு மாநகராட்சி விதிகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் சாலைகளுக்காக 1139.265 ச.மீ பரப்பளவு மனையும் பொது ஒதுக்கீடுக்காக 19.80 ச.மீ மனையும் மாநகராட்சி ஆணையாளர் பெயரில் தான பத்திரம் எண்:4151/2023, நாள்:02.11.2023—இன் படி பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு 120(4)—இன்படி தானபத்திரம் மூலம் பெறப்பட்டுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடு பகுதிகளை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ளவும் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்:எப்1/17862/2023

**தீர்மானம் எண்.837**

அனுமதிக்கப்படுகிறது.

- 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.S. V. உதயகுமார் அவர்கள் இன்று நடைபெற்ற இயல்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட விண்ணப்பத்தில் இயல்வு கூட்ட பொருள் வரிசை எண்.3 முதல் 11 வரை, 15 முதல் 29 வரை, 33, 34, 35, 59, 60, 61 மற்றும் 62 ஆகிய பொருள்கள் மீது அன்னாரது எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது.